# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.80/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயந்தி | மதம் | : இந்து |
| க/பெ | : குப்பாராவ் | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : அரக்கோணம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : அரக்கோணம் |

**08.01.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. 04.07.1973ல் என் அப்பா வழக்கு சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் ஆமாம். என் அப்பா கிரையம் வாங்கிய அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1973ல் என் தம்பிக்கு என்ன வயதிருக்கும் என்றால் 7, 8 வயதிருக்கும். தாவா சொத்தின் கிரைய ஆவணம், வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தை என் அப்பா வாங்கும்போது என் தம்பி இளவராக இருந்தார் என்றால் சரிதான். 06.10.1973ல் வாதிக்கு வழக்கு சொத்தை என் அப்பா கிரையம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கிரையம் வாங்கிய தேதி முதல் இன்று வரை வாதிதான் வழக்கு சொத்தை வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. நான்தான் வரி செலுத்தி அனுபவித்து வந்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்புதான் நான் வரி செலுத்தவில்லை.

5. தாவா சொத்திற்கு ஏற்கனவே அ.வ.எண்.83/2009 என வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றால் இல்லை. அது வேறு சொத்தாகும். புல எண்.39/8, 54/1, 55/1, 42/10 ஆகிய சொத்துக்களுக்குதான் வழக்கு தாக்கல் செய்திருந்தோம். அந்த சொத்துக்களோடு இந்த சொத்தும் சேர்ந்து வந்தது. நான் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.83/2009ல் உள்ள பிரதிவாதிக்கும் அந்த சொத்துக்களுக்கும் எந்த

சம்மந்தமும் இல்லை என்பதால்தான் எங்களுக்கு சாதகமாக ஒருதரப்பு தீர்ப்பானது என்றால் ஆமாம். எதிர்தரப்பினர் வழக்கை நடத்தவில்லை. எனவே எங்களுக்கு தீர்ப்பானது. அந்த ஒருதரப்பு தீர்ப்பை வைத்துதான் நாங்கள் பாகப்பிரிவினை தயார் செய்தோம் என்றால் ஆமாம். முன் வழக்கில் என் பரிகாரம் கேட்டிருந்தோம் என்றால் எங்கள் சொத்து என்று வழக்கு தாக்கல் செய்திருந்தோம்.

6. முன் வழக்கிற்கும் இந்த வாதி அங்கம்மாளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் செய்த பாகப்பிரிவினையும் ஒருதலைபட்ச தீர்ப்பை வைத்துதான் செய்தோம் என்றால் ஆமாம். 27.02.2020ல்தான் பாகப்பிரிவினை ஆவணத்தை ஒருதலைபட்ச தீர்ப்பை வைத்து பதிவு செய்தோம் என்றால் ஆமாம். ஒருதலைபட்ச தீர்ப்பை வைத்து செய்த பாகப்பிரிவினை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. பாகப்பிரிவினை செய்து இத்தனை வருடங்கள் ஆகியும் ஏன் பாகப்பிரிவினை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். வில்லங்க சான்று பார்த்து பாகப்பிரிவினை ஆவணம் பற்றி தெரிந்து வாதி நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் அளித்தார் என்றால் ஆமாம். ஒருதலைபட்ச தீர்ப்பை வைத்து நாங்கள் பாகப்பிரிவினை செய்துள்ளதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என்றால் ஆமாம்.

7. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அறிவுறுத்தியதன் அடிப்படையில்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். ஒருதலைபட்ச தீர்ப்பை வைத்து பாகப்பிரிவினை செய்து அதனடிப்படையில் பட்டா பெற முயற்சி செய்தோம் என்றால் ஒருதலைபட்ச தீர்ப்பை வைத்துதான் பத்திரம் பதிவு செய்தோம். பட்டா பெறவும் முயற்சி செய்தோம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)